பொருளியல்

# உற்பத்திக் காரணிகளின் பண்புகள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி 1.3

# உற்பத்திக் காரணிகள்

**உற்பத்திகளை மேற்கொள்ளப் பயன்படும் அடிப்படை காரணிகளே உற்பத்திக் காரணிகள் ஆகும் அவையாவன**

1. நிலம்
2. உழைப்பு
3. மூலதனம்
4. முயற்சி

**இவற்றில் நிலம்,மூலதனம் என்பன ஆதன வளமாக/பௌதீக வளமாக உள்ளன. மாறாக உழைப்பு, முயற்சி என்பன மனித வளமாக உள்ளன.**

## நிலம்

**உற்பத்திக்கு பயன்படுகின்ற,இயற்கையில் கிடைக்கக்கூடிய வினைத்திறனான வளங்களைக் குறிக்கும்**

இவற்றின் பண்புகளாவன:-

- இயற்கையின் கொடையாகும்
- நிரம்பல் நெகிழ்வற்றது
- அசைவுத்தன்மை அற்றவை
- வினைதிறனை உயர்த்த உதவும்
- ஓரினத்தன்மையற்றவை
- இதற்கான காரணிக்கொடுப்பனவு வாடகையாகும்



தொகுப்பு - ஈ.பிரபாகரன் ஆசிரியர் (யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உழைப்பு

**உற்பத்திக்கு பயன்படக்கூடிய உடல்,உள ரீதியான மனித வலுவே உழைப்பாகும்**

இவற்றின் பண்புகளாவன:-

- உயிருள்ள காரணியாக இருத்தல்
- ஓரினத்தன்மை அற்றவை
- கல்வி,பயிற்சி என்பவற்றின் மூலம் வினைதிறனை உயர்த்த முடியும்
- தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் உடையவை
- இவற்றை ஒழுங்கு படுத்தக்கூடியது
- சம்பளம் /கூலியில் அதிக அக்கறை உள்ள காரணி

**இவ்வாறான ஊழியவளத்தின் அளவை தீஇர்மானிக்கும் காரணிகள்**

⇒ **சனத்தொகை அமைப்பும் வயதமைப்பும்**

⇒ **மக்களின் சுகாதார நிலமை**

⇒ **கல்விமட்டமும் தேர்ச்சி மட்டமும்**

## மூலதனம்

**உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட நீண்டகால பாவனையுடையவையும் பெறுமானத்தேய்வுக்கு உட்படக்கூடியவையுமான மெய்ச்சொத்துக்களாகும்.**

**உதாரணம் :-**

**கட்டடம், பொறிகள், விமான நிலையங்கள்**

இவற்றின் பண்புகளாவன:-

- மனிதனால் உருவாக்கப்பட்டவை
- இது ஓர் இருப்பு மாறியாகும்
- வினைதிறன் மிக்கது
- மீண்டும் மீண்டும் உற்பத்திக்குப் பயன்படக்கூடியது
- வட்டி வருமானத்தை ஈட்டித்தருவது



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

NOTE

இம்மூலதன மட்டத்தை தீர்மானிப்பது நாட்டின் நிலவும் தொழில் நுட்பமாகும்

## மூலதனத்தின் வகைகள்

### 1 நிலையான /மெய்/பௌதீக மூலதனம்

- உற்பத்திக்கு பயன்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட மெய்ச்சொத்துக்கள்

### 2 தொழிற்படும்/சுழலும்/இருப்பு மூலதனம்

- உற்பத்திக்கு பயன்படும் மூலப்பொருட்கள்,குறை வேலைப் பொருட்கள், இறுதிப்பொருள் இருப்புக்களைக் குறிக்கும்.
- இவை உற்பத்திச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொள்ளவும், எதிர்கால உற்பத்தியை திட்டமிடவும் அவசியமானவையாகும்.

### 3 பொருளாதார பொதுச்செயற்பாட்டு மூலதனம்

- பொருளாதாரத்தில் உற்பத்திகளையும் பங்கீட்டுச் செயற்பாட்டையும் இலகுபடுத்தும் மூலதனங்கள் ஆகும். இவைகளே உட்கட்டுமான வசதிகள் எனப்படுபவையாகும்.
- உதாரணம் :- விமான நிலையங்கள்,பெருந்தெருக்கள் -இவை பெரும்பாலும் அரசினால் உற்பத்தி செய்யப்படுபவை, தனியார் முதலீடுகளை ஊக்கப்படுத்துபவை

### 4 சமூகப் பொதுச் செயற்பாட்டு மூலதனம்

- மனிதனின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற பயன்படும் சேவைகளை வழங்கும் மூலதனங்கள் ஆகும். இவற்றின் மூலமே சமூக நலன் விருத்தியடைகின்றன
- உதாரணம்:- பாடசாலை கட்டிடம்

தொகுப்பு - ஈ.பிரபாகரன் ஆசிரியர் (யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### மனித மூலதனம்/மானிட மூலதனம்

- ஊழியர்கள் உற்பத்தியில் ஈடுபடும் போது மிகவும் வினைதிறனாக செயற்பட உதவும் கல்வி, அனுபவம், பயிற்சி, சுகதார நிலை போன்றவற்றின் மூலம் மனிதனிடம் உள்ள சிறப்பு நுட்பம், கற்றல், அறிவு மனித மூலதனமாகும்

5

### இயற்கை மூலதனம்

6

- உற்பத்திக்கு பயன்படக்கூடிய அனைத்து இயற்கை வளங்களை குறிக்கும்

### சமூக முதல்/சமூக மூலதனம்

- சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் விருத்தியடையச்செய்யும் நிறுவனங்கள், நல்லொழுக்கங்கள்,விழுமியங்கள் போன்ற தொடர்பாடல் வலையமைப்புகள் சமூக மூலதனமாகும்

7

⇒ **பொருளியலில் பணத்தை மூலதனமாக கருதுவதில்லை காரணம் பணத்தைப் பயன்படுத்தி நேரடியாக உற்பத்தி இடம்பெறுவதில்லை மாறாக பணத்தைக்கொண்டு உருவாக்கப்படும் மெய்ச் சொத்துக்களே உற்பத்திக்கு நேரடியாக பயன்படுகின்றன**

⇒ **பணம் கணக்கீட்டில் மூலதனமாகக் கருதப்படுகின்றது.**

**சேமிப்பு,முதலீடு, மூலதனம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பு**

⇒ **மூலதனம் என்பது முதலீட்டின் மூலம் உருவாகின்றது, முதலீட்டிற்கு அடிப்படையாக அமைவது சேமிப்பாகும்.**



### சேமிப்பு

**உள்நாட்டுச் சேமிப்பு**

- வீட்டுத்துறை சேமிப்பு

  வீட்டுத்துறை வருமானத்தில் நுகர்ச்சிக்கு செலவிடப்படாத பகுதி

- நிறுவனத்துறை சேமிப்பு

  உழைத்த இலாபத்தில் பகிரப்படாத பகுதி

- அரச சேமிப்பு

  அரச வருமானத்தில் நடைமுறைச் செலவை கழித்து பெறப்படுவது

**வெளிநாட்டுச் சேமிப்பு**

- கடன்கள்
- நேரடி முதலீடுகள்
- நன்கொடைகள்

தொகுப்பு - ஈ.பிரபாகரன் ஆசிரியர் (யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## முயற்சி

**உற்பத்திக் காரணிகளை ஒருங்கமைத்து செயற்படுத்தி ஆபத்துக்களை எதிர்நோக்கி கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் ஆகும்.**

இவற்றின் பண்புகளாவன:-

- மானிட வளமாக இருத்தல்
- ஆரம்பிக்கும் திறன்
- சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல்
- தலைமைத்துவ ஆற்றல்
- தன்னம்பிக்கை
- எதிர்கால நோக்கு
- காரணி வருமானம் இலாபம் ஆகும்(+/-)

### தொழிற்பாடுகள்

1. கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுத்தல்
2. உற்பத்தி செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்
3. புத்தாக்கத்தில் ஈடுபடல்
4. ஆபத்துக்களை ஏற்றல்

♦ **புத்தாக்க செயற்திறன் மூலம் பொருளாதாரத்தின் மூலதன உருவாக்கத்திற்கு பெரும் பங்காற்றுகின்றது.**

### முயற்சியான்மைக்கும் முகாமையாளருக்கும் இடையிலான வேறுபாடு

⇒ முயற்சியாளர் மேற்கொள்ளும் தீர்மானங்களை செயற்படுத்துபவரே முகாமையாளர் ஆவார்

⇒ முயற்சியாளருக்கான கொடுப்பனவு இலாபம் முகாமையாளருக்கான கொடுப்பனவு சம்பளம்

⇒ முயற்சியாளர் காப்புறுதி செய்ய முடியாத ஆபத்தை தாங்க வேண்டும் முகாமையாளர் அவ்வாறு தாங்க வேண்டியதில்லை

தொகுப்பு - ஈ.பிரபாகரன் ஆசிரியர் (யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### காரணிகளின் விளைதிறன்

⇒ ஓரளகு காரணி உள்ளீட்டுக்கான சராசரி வெளியீட்டலகு காரணி விளைதிறன் எனப்படும்.

$$\text{காரணிகளின் விளைதிறன்} = \frac{\text{வெளியோட்டின் அளவு}}{\text{காரணி உள்ளீட்டு அளவு}}$$

உதாரணம்

$$\text{ஊழிய விளைதிறன்} = \frac{\text{மொத்த வெளியீடு}}{\text{ஊழியரின் எண்ணிக்கை}}$$

**இவ்விளைதிறனை தீர்மானிக்கும் காரணிகள்**

⇒ தொழில் நுட்பம்

⇒ மனித மூலதனம்

⇒ முகாமைத்துவம்

⇒ தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk